Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 2, January 2023 E-ISSN: 2583-0481

# Culture and Moral of the Marutham Land Thalaivi

**Dr. M. Patrick Jebaraj**, Assistant Professor of Tamil, Bishop Heber College, Tiruchirappalli-17, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-6812-9447**
**DOI: 10.5281/zenodo.7593146**

## Abstract

*All Sangam internal literature is a collection of hymns based on Agamander's statement. The protagonist occupies a prime position in the Agamanthars both based on the statement and the nature of the context in which it is said. The protagonist was a centralized person by other people. Therefore, the purpose of the research paper is to examine the sentiments of love, compassion, affection, irony, and conflict towards her counterpart examining only the songs of the leader of the hospital in Sangam intra-songs. The research paper reflects the basic instincts of the protagonist of Sangam literature.*

**Keywords**: Soil, land, Statement, Agam, Hospitality.

## References

[1] Anantharamaiyar, E.V. (P.A.) *Source of Studies and Text of Nachinarkiniyar*. Tamil University Thanjavur, 1984.
[2] Yumpuranar, (U.A.) *Tholkappiyam Mahatikaram*. Tirunelveli South Indian Saiva Siddhantha Literature Institute, Chennai, 2004.
[3] Ramakrishnan, A. *A Study of Agathina Mandar*. Sarvodaya Literary Farm, Madurai, 1982.
[4] Kathir Mahadevan, (U.A.) *Sangha Literary Edition Series*. Kovilur Monastery, Kovilur, First Edition 2003.
[5] Subramanian, S.V. (U.A.) *Bathuppattu*. Kovilur Monastery, Kovilur, First Edition 2003.
[6] Subramanian, B. Balasubramanian G.V. (U.A.) Dakshinamurthy A. *Sangam Literature Paripadal Source and Text*. New Century Book House, Ambattur, Chennai, 4th Edition 2011.
[7] Seypal, Ira. (U.A) *Sangha Literature Agananur*. New Century Book House, Chennai, Fourth Edition 2008.
[8] Tamilannal (U.A.). *Kurundogai*. Kovilur Monastery, Kovilur, First Edition 2002.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

169

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# மருதநிலத் தலைவியின் ஒழுகலாறும் பண்பாடும்

**முனைவர் ம. பெட்ரிக் ஜெபராஜ்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-17, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-6812-9447**
**DOI: 10.5281/zenodo.7593146**

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க அக இலக்கியங்கள் அனைத்தும் அகமாந்தரின் கூற்று அடிப்படையில் அமைந்த பாடல்களின் தொகுப்பே ஆகும். கூற்று அடிப்படையிலும் கூறப்படும் சூழல், பின்புலம், தன்மை ஆகியவற்றின் அடிப்படையிலும் அகமாந்தர்களில் தலைவியே முதன்மையான இடத்தைப் பெறுகிறாள். பிறமாந்தர்கள் அனைவரும் தலைவி வழிப்பட்டவர்களே. எனவே சங்க அகப் பாடல்களில் மருதநிலத் தலைவியின் கூற்றுப் பாடல்களை மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தி தலைவி - தலைவனிடம் காட்டும் அன்புணர்ச்சி, பரிவு, பாசம், முரண், ஊடல் போன்ற நுட்பமான உணர்வுகளைக் காண்பது ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** திணை, கூற்று, அகம், ஊடல், பரத்தமை, சூல், விருந்தோம்பல் .

**முன்னுரை**

சங்க இலக்கிய மருதத்திணைப் பாடல்களில் கூற்று நிகழும் சூழல்களின் அடிப்படையில் பெரும்பாலும் தலைவி, தோழி, பரத்தை என பெண்களே இடம்பெறுவதையும் அவற்றுள் மருதத்திணை ஒழிந்த பிற திணைகளில் உள்ள தலைவியின் பாத்திரப் படைப்பைக் காட்டிலும் மருதத்தலைவி பலவற்றிலும் பெருமை சான்றவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள் என்பதை சங்க இலக்கிய எட்டுத்தொகை அகநூல்களில் உள்ள மருதத்திணை பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன. மேலும் மருதத்திணையில்தான் பெண்களின் நுட்பமான உணர்வுகள் பேசப்படுவதாலும் சங்க இலக்கிய மருதநிலத் தலைவியின் ஒழுகலாற்றையும் பண்பாட்டையும் பேச வேண்டும் என்பதன் வெளிப்பாடாக இக்கட்டுரை அமைகிறது.

**சங்க இலக்கிய எட்டுத்தொகை அகநூல்களில் தலைவி கூற்று**

சங்க இலக்கிய எட்டுத்தொகை அகநூல்கள் ஆறில் தலைவி கூற்றாக நற்றிணையில் 7 பாக்களும், குறுந்தொகையில் 22 பாக்களும், பரிபாடலில் வாயில் மறுத்தல் துறையில் 1 பாடலும், ஐங்குறுநூற்றில் தலைவி கூற்றாக 39 பாக்களும், கலித்தொகையில் உள்ள மருதக் கலியில் 21 பாக்களும் அகநானூற்றில் 11 பாக்களும் இடம்பெறுகின்றன. மொத்தமுள்ள 263 மருதப் பாக்களில் 101 பாக்கள் தலைவி சார்ந்தவையே என்பது நோக்குதற்குரியது.

**மருதநிலத்தலைவியின் பெருந்தன்மை**

அகத்திணையில் தலைவி இன்றி ஏதுமில்லை "இத்தலைவி தொல்காப்பியத்துள்

கிழத்தி, கிழவி, கிழவன், மனைவி" என குறிக்கப்படுகிறாள். (தொல்.பொ.இளம்.களா.நூ.116, 121, கற்.நூற்.159,164) மேலும் "குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளின் உரிப்பொருள்கள் ஆகிய புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய ஐவகை உணர்வுகளும் தலைவியை மையமாகக் கொண்டவையே" (இராமகிருஷ்ணன். ஆ,1982: ப107) என்று இராமகிருஷ்ணன் குறிப்பிடுகிறார். அதேசமயம் மருதத்திணை ஒழிந்த ஏனைய திணைகளில் அவ்வளவாக தலைவியின் பாத்திரப்படைப்பு சிறக்கவில்லை என்றே கூறலாம். ஏனெனில் பிற திணைகளில் தலைவனோடு மனதளவேனும் ஒன்றி வாழ்ந்து விடுகிறாள் தலைவி. ஆனால் மருதத் திணையில் தலைவனது பரத்தமை எவ்வாறு இருப்பினும் அத்தனையையும் பொறுத்துக் கொள்ளும் இல்லறத் திகழ்கின்றாள். மருத நிலத் தலைவி கூற்றுகளில் எல்லாம் தலைவனிடம் கொண்ட கோபம் வெளிப்படுகிறது. பரத்தைக் குறிகளோடு வந்தாலும் அவன்பால் உள்ளம் மகிழ்ந்து ஏற்றுக்கொள்கிறாள். ஆண்டிற்கு ஒருமுறை மழை வரவு போல என்று வரினும் கூட அவன் வரவினை மதிக்கிறாள். இதை கலித்தொகை 71: 26 ஆம் பாடல் வரி "ஓர் யாட்டு ஒரு கால் கால்" என்று சுட்டிக் காட்டுகிறது. பரத்தையிற் பிரிந்த தலைவன் வருவதற்கு முன்பு வரை அவன் வரவைக் குறித்து

**மாய மகிழ்நன் பரத்தைமை**
**நோவேன் தோழி கடன் நமக்கெனவே (கலித்தொகை 75: 33 )**

என்றும் வாயில் மறுத்திடல் வேண்டும் என்றும், நெஞ்சம் இளகக் கூடாது, அவன் பேச்சிற்கு உடன்பட்டுவிடக்கூடாது என்றும் பலவாறாகக் கருதுகின்றாள் ஆனால் அவனைக் கண்டதும் அவனுடைய தவறை இலைமறைக்காயாய் சுட்டிக் காட்டி தன் கடமையை உணர்ந்து அவனை மன்னித்து ஏற்றுக் கொள்கிறாள். தலைவனது இழிவான போக்கை தலைவி உணராதவளும் அல்ல, அவனது பொய்யிற்கு ஏமாறுபவளும் அல்ல, தலைவனை ஏற்றுக் குடும்பத்தைச் சீர்செய்தல் தன் கடமை எனக் கருதுகிறாள். தலைவன் தவறிழைத்தாலும் பொறுமையோடிருந்து ஏற்றுக் கொள்ளுதல் அல்லது திருத்துதல் என்னும் வரையறையை வகுத்துக் கொள்கிறாள் எனவே சங்க இலக்கியத் தலைவியின் பாத்திரப் படைப்பு பின்வந்த இலக்கியங்களின் பாத்திரப் படைப்பிற்கு முன்மாதிரியாக விட்டுக் கொடுத்துச் செல்லும் பெருந்தன்மை குணம் கொண்டவளாக மருதநிலத் தலைவி படைக்கப்பட்டிருக்கிறாள்.

**ஊடல் கொள்பவள்**

மருதத் திணையின் உரிப்பொருளாகச் சுட்ட பெறுவது ஊடல். தலைவி - தலைவனின் உறவு நிலை என்பது அன்பை மையமாகக் கொண்டது மாறாக தலைவன் பரத்தை உறவு நிலை என்பது வேட்கையை மையமாகக் கொண்டது. இவ்வேறுபாடு ஏற்படுவதற்கு தலைவியின் இளமை கழிவும் பரத்தையின் இளமை பூரிப்பும் ஒரு காரணமாக இருக்கலாம். தலைவனின் மன வேறுபாட்டினை உணர்ந்த தலைவி தனது ஊடலின் போது

**போதார் கூந்தல் நீ வெய்யளோடு (அகநானூறு 246: 5)**
**நின் வெம் காதலி (ஐங்குறுநூறு 71: 2)**

என்று பேசுகிறாள். இக்கூற்று தலைவனால் விரும்பப்பட்டவள் பரத்தை என்பதையும் தலைவனை விரும்பியவள் தலைவி என்பதையும் நுட்பமாகக் காட்டுகிறது. தலைவனுடன் பரத்தை கொண்ட ஊடலைச் சுட்டுகின்ற தலைவி பரத்தையின் கூற்றினை கூறும் போது,

**யான் நோவ உள்ளம் கொண்டுள்ள**

**மகன் அல்லான் பெற்ற மகன் (கலித்தொகை 86: 26)**

எனப் பரத்தை தலைவியின் மகனை நோக்கிக் கூறுவதாகக் குறிப்பிடுகிறாள். தலைவனது விடாப் பரத்தமைக்குத் தலைவி காரணம் என்பது போல பரணரின் சில பாடல்கள் அமைந்துள்ளன. "வையை நீர் காதல் பரத்தையோடு தலைமகன் நீராடினான் எனக்கேட்டு தலைமகள் வையை நீர் விழவணியையும் ஆங்கு பட்ட செய்தியினையும் கூறி ஊடல் கொண்டுவாயில் மறுத்த செய்தி இடம் பெறுகிறது"(பரிபாடல் 6) மேலும் இள மகளிரோடு நீல ஆடை அணிந்து புதுப் புனல் ஆடினாய் நாணிழந்தாய் என்று அகம் 266:8 நேர்பட இடித்துரைக்கின்றாள் தலைவி.

**ஒலிபல் கூந்தல் நலம்பெறப் புனைந்த**

**முகை அவிழ் கோழை வாட்டிய**

**பகைவன் மன்யான் மறந்தமை கலனே (நற்றிணை 290: 8-10)**

நட்பாகி என் கூந்தலுக்கு மலர் சூடியவனே இப்போது அம்மாலை வாடும்படி செய்கின்றாள். இளமை இன்பத்திற்கு பகைவன் ஆயினான். அவன் கைவிட்ட செயலை எப்படி மறப்பேன் என்று மிகக் கடுமையாகச் சாடுகிறாள். மற்றொரு பாடலில் தலைவி தன்னை தாமரை மலருக்கும் பரத்தையை சேற்றில் முளைக்கும் கழுநீர் மலருக்கும் ஒப்புமை செய்கிறாள். அது மட்டுமன்று தலைவனை நோக்கி பகைவனே என்று ஊடுகிறாள். பிறிதொரு பாடலில் **"பகைவன் மன்யான் மறந்தமை கலனே" (நற்றிணை 260: 10)** பரத்தையிடம் சென்று விட்டு என் மீது விருப்பம் உள்ளவன் போல தழுவிக்கொள்ள வருகிறாய் என் கூந்தலுக்கு அழகு சேர்த்த மாலை வாடி வதங்குமாறு என்னைப் பிரிந்தாய். அதை என்னால் மறக்க முடியாது பகைவனே என்னைத் தொடாதே என்று தலைவி ஊடல் கொள்கிறாள். தலைவி கூற்றாக அமைந்த மற்றொரு பாடலில் "தலைமகன் பொதுமகளை நாடினான். சிறிது காலம் கழித்து தன் மனைக்கு வந்தான் ஆனால் தலைமகள் ஊடல் கொண்டாள். உன் பிரிவால் என் அழகு நலன்கள் குன்றியது அந்த அழகு தொலைந்தாலும் தொலையட்டும் எனினும் உன்னை நெருங்க விடமாட்டேன் நீ பரத்தையை நாடு அவள் உடலில் உள்ள சந்தனத்தை உன் மார்பில் தாங்கியவனாக உள்ளாய் அவள் அணிந்திருந்த மாலைகள் மலர்கள் ஆங்காங்கே உன் உடலில் காணப்படுகின்றன அத்தகைய தன்மை உடைய நீ இங்கு வரவேண்டாம் உன்னை அடைந்த பரத்தை நீடு வாழ்க என்று கூறுகிறாள் தலைவி" (நற்றிணை 350: 5 - 10)

குறுந்தொகைப் பாடல் ஒன்றில் "பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே" (குறுந்தொகை 19:4) என்று தலைவன் யாது செய்வது என்று ஆற்றாது தன் நெஞ்சை நோக்கி இறங்கும் போது அவன் கழிவிரக்கம் காணும் தலைவி பிணக்கு ஒழிந்ததாகக் கூறுகிறது. இவ்வாறு எண்ணற்ற

பாடல்கள் எட்டுத்தொகை நூல்களில் தலைவி ஊடல் கொள்வதுபோல் காணப்படுவதால் தலைவியை அன்பிலாதவள் என்று முடிவு செய்துவிட முடியாது. அவளது உள்ளம் தூயது பற்று உடையது தலைவன் மீது அளவுகடந்த காதல் கொண்டவளாக இருக்கிறாள். தன் தலைவனது பரத்தமைக்கு அவள் பேசுவது பொருந்தும் என்று கருதிக் கொள்க. எனினும் அன்பற்றவள் போன்ற எல்லைக்கே சென்றாலும் அத்தகைய ஊடலால் தலைவனின் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்த முற்படுகிறாள்.

**ஊடல் தணிபவள்**

பரத்தையர் இன்பம் நுகரச் சென்ற தலைவனின் பிரிவை தலைவி அறிவாள் தலைவன் மீண்டும் இல்லம் திரும்புகையில் தலைவி சிலசமயங்களில் வாயில் மறுக்கிறாள் வாயில் பெறாது தலைமகன் தன் புதல்வனைத் தழுவிக்கொண்டு கொஞ்சி குலாவி வீட்டினுள் நுழைவான் அப்போது பெரும்பாலும் தலைவி தலைவனது குறையை மறந்து ஊடல் தணிபவளாகக் காட்டப்படுகிறாள். மருத நிலத்தில் தலைவியின் ஊடலைத் தீர்க்கும் வாயிலாக விருந்து விளங்குகின்றது. தொல்காப்பிய தலைவன் ஒழுக்கத்திலிருந்து கற்பு நிலையில் இல்லறம் கொண்டு வாழும் மனைவாழ்க்கை இனிதுறச் சிறப்படையும் வகையில் வாயில்களில் விருந்தினரும் தலைப்படுவர்" (தொல் பொருள் இளம் கற்பியல்நூற்பா 150: 3-4) என்று தொல்காப்பியம் கூறுகிறது. நற்றிணை பாடல் ஒன்றில் வாயில் வேண்டிச் சென்ற தோழிக்கு தலைமகள் சொல்லியதாகப் பாடல் அமைகிறது அப்பாடலில் பரத்தை உறவினால் என்னைப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் வந்தான் என் வீட்டில் விருந்தினராக வந்து இருப்பவர்களை கவனிக்க வேண்டிய சூழல் உள்ள காரணத்தால் ஊடல் கொள்ளவில்லை என்கிறாள் தலைவி. பாடல் பின்வருமாறு

**நல் மனை நனிவிருந்து அயரும்**
**கைதூ வின்மையின் எய்தா மாறே (நற்றிணை 280: 9 - 10)**

தலைவன் இங்ஙனம் தலைவியின் மனம் வருந்தும்படி பல தீமைகளைச் செய்து இருந்தாலும் அவள் அவை அனைத்தையும் பொறுத்துக் கொண்டு தலைவனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே சங்க இலக்கிய நியதியாக இருக்கிறது. ஒரு பாட்டில் தோழி தலைவியை நோக்கிக் கூறுகிறாள். "உழவர் தம் வயலில் முளைத்த கலையை பிடுங்கி எறிவர் ஆயினும் அது மீண்டும் அவரது வயலிலேயே பூக்கும். அதுபோல எனக்குத் தீமை செய்த நின்னிடம் அன்புடையேன் ஆகினேன்" (குறுந்தொகை 309). இக்கூற்று தலைவி கூற்றுப் போலவே அமைந்திருக்கிறது. தலைவி பரத்தையை வெறுத்தாலும் பரத்தையிடம் சென்று வரும் தலைவனை அவளால் வெறுக்க முடியாது. அப்படிப்பட்ட சமூகச் சூழலே அக்காலத்தில் நிலவியது என்பதைத்தான் இது காட்டுகிறது. சிறு சிறு கருத்து வேறுபாடு இருந்தாலும் எந்தப் பெண்ணும் தன்னை அன்பால் அரவணைப்பதையே தலைவனிடம் விரும்புகிறாள்.

**இல்லற ஒழுக்கம்**

தலைவி - பரத்தை என அகமாந்தர் அடிப்படையில் தலைவனின் புறத்தொழுக்க

அடிப்படையில் தலைவனின் செயல்கள் கணிக்கப்படுவதில்லை. மாறாக இல்லற ஒழுக்கம் பரத்தமை ஒழுக்கம் என்று சமுதாயப் பார்வை அடிப்படையிலேயே அது கணிக்கப்படுகிறது சிறந்த ஒழுக்கத்திற்குத் துணை நிற்பவள் தலைவி ஆதலின் அவள் மேலானவள் இழிந்த பரத்தமை ஒழுக்கத்திற்கு துணைநின்றவள் பரத்தை ஆகவே அவள் கீழானவள். இவர்களிடையே புலவர்கள் காட்டும் வேறுபாடு மனைவி பரத்தை என்று சமூகம் வேறு படுத்துகின்ற குறியீடுகள் தான் மற்றபடி அன்பு என்னும் உள்ளீடற்றவளாக பரத்தை குறிக்கப்படுவதற்கு வேறு காரணம் தெரியவில்லை. உண்மையில் பரத்தை வெறுத்தற்குரிய பண்புகள் எவையும் ஆழமாகக் கொண்டிருப்பவளாக சித்தரிக்கப்படவில்லை.

### விருந்தினரைப் போற்றும் பண்பு

விருந்தெதிர் கோடலும் விருந்தோம்பலும் வறியவர்க்கு ஈதல் தலைவியின் தலையாய கடமையாக இருந்துள்ளது. மருத நிலத்தில் தலைவியின் ஊடலைத் தீர்க்கும் வாயிலாக விருந்து இருந்து விளங்குகின்றது. நாள்தோறும் புதுப்புது பரத்தையை நாடி வரும் இயல்பினான தலைவனைத் தனக்குப் பிடிக்காத நிலையில் தலைவி ஊடல் கொள்ளாது ஏற்றுக்கொள்கின்றாயே என்ற தோழியினிடத்து "பரந்த கழுத்தின் மயிரினையும் மனச்செருக்கினையுடைய குதிரை போன்ற தேரின் கண் கொண்டு வந்த விருந்தினரை எதிர்ச்சென்று வரவேற்கும் முறையினால் நாளும் புலவியை மறப்பேன்" (கலித்தொகை பாடல் 75: 27 - 32) மேலும் "மிகப்பழைய வேளிரின் வயல்களை காவல் செய்வோர் ஆமையின் பசிய இலை போல காணப்படும் முதுகில் உள்ள நத்தையை உடைத்து உண்பர். அந்த ஊர் போன்ற எனது நல்ல மனையில் விருந்தினர்களை ஓம்பும் கடமையில் கை ஓயாது ஈடுபட்டுள்ளதால் யான் பிறவாது உள்ளேன் (நற்றிணை 280: 6-10) என்கிறாள். தலைவி. சமைக்கும் திறனில் கைதேர்ந்த மருதநில மகளிர் இரும்பாலான உலக்கையின் பூண்தேயக் குத்தி எடுத்த அரிசியால் ஆக்கிய வெள்ளிய சோற்றுடன் பிளந்த கால் உடைய நண்டுக் கறியுடன் கலந்த கலவைகளை உண்பர். (சிறுபாண் ஆற்றுப்படை 193-195). மேலும் "வெள்ளை நிற நெல் சோற்றை வீட்டில் வாழும் மனை கோழியின் பொரியலுடன் உண்ணத் தருவார்கள்".(பெரும்பாணாற்றுப்படை 254-256) இவை தவிர வயல்களில் விளைந்த நெல்லும் வலை வீசும் ஓர் பிடித்து வந்த பெரியவாளை மீன்களும் தூண்டில் போடுவோர் பிடித்துக் கொண்டு வந்த வரால் மீன் துண்டுகளுடன் நண்டுக் கறியும் தருவர். சுற்றத்தார் சூழ ஓம்புகின்ற சிறந்த சூல் உடையவளாய் மகவு ஈன்று நம் குடி செழிக்குமாறு தன் கடமையை ஆற்றியவள் தலைவி என்று தலைவன் புகழ்ந்துரைக்கின்றான்." (நற்றிணை 120: 4-6) இவ்வாறு மருத நிலத் தலைவி பல்வேறு நிலைகளில் விருந்தோம்பல் செய்துள்ளதை அறியமுடிகிறது.

### தலைவியின் எதிர்பார்ப்பு

மருதப் பாடல்களில் தலைவி கூறும் முறையில் அனைத்து இழி நிலைக்குக் காரணமான தலைவனின் குணங்கள் கண்டனத்திற்கு உள்ளாகின்றன. ஊடல் கொண்ட மனநிலையில் தலைவி தானே உள்ளுறை கூறுகிறாள் தலைவி. தான் பிரிந்து வருந்திய

வாழ்வில் தலைவனும் பிரிந்து வருந்தும் வருத்தத்தைக் காண விரும்புவதாகக் கூறுகிறாள் உதிர்ந்த பழம் பொய்கையில் விழுவது போல தலைவன் தலைவியிடம் வருவதாகக் கூறி அவன் விரும்பி வரவில்லை அலர் அஞ்சி வருகிறான் என உள்ளுறையில் சாடுகிறாள். தலைவியின் உள்ளார்ந்த போக்கு என்னவெனில் தலைவன் எப்போதும் தனக்கு மட்டும் உரியவனாக இருக்க வேண்டும் என்பதே. தலைவி தலைவனிடம் முழு அன்போடு கடமையாற்றுகிறாள். தன் உடைமை அனைத்தையும் தன்னையும் தலைவனுக்கானவை என எண்ணுகிறாள் சில நேரங்களில் தலைவனை தெய்வத்திற்கு நிகராகக் கூட கருதுகிறாள். அதனால் அதே முழு அன்பை தலைவனிடம் இருந்தும் எதிர்பார்க்கிறாள். தலைவன் உண்மையான அன்புடன் திரும்பி வரவேண்டும் என்பது ஊடல்களில் காணப்பெறும் தலைவியின் எதிர்பார்ப்பு ஆகும்.

**தலைவியின் உரிமை நாட்டம்**

உணர்வாலும் புணர்வாலும் தலைவிக்கு நிகராகப் பரத்தையின் படைப்புக் காணப்படுகிறது. தலைவி பரத்தை பற்றிக் குறிப்பிடும் பாடல்களில் தலைவன் பரத்தைக்கு உரிமைகளைத் தருவதாகக் கூறி ஊடல் கொண்டு நிற்பதைக் காணலாம். இன்பச் சூழலில் மட்டும் பரத்தைக்குத் தரும் உரிமைகளைக் கண்டு தலைவி மனம் வெதும்புவது பொருள் பொதிந்ததாக இருக்கிறது. மக்களைப் பெற்றவள் என்னும் உரிமையும் அவளுக்கு இருக்கிறது எனவே பரத்தையை தனக்கு நிகராகக் கருதி தலைவி போராட வேண்டிய அவசியம் இல்லை. ஒரே பிடிப்பு அவள் தலைவியைப் போல குழந்தையைப் பெற்று மூத்து வாடிப்போனவள் அல்ல இன்னும் இளமை அவளிடம் இருக்கிறது என்ற ஒன்றுதான் அது நிலையற்றது என்பதை அவளும் அறிவாள். தலைவி பூப்பெய்திய சூழலில் தலைவன் தன்மனை திரும்பியது கண்டு தலைவி பெருமிதமும் உரிமை நாட்டமும் காட்டியபோது பரத்தை தான் அவனை விரும்பியே விடுத்ததாகவும் மீண்டும் தன் பக்கம் இழுத்துக் கொள்ள முடியும் என்று வஞ்சினம் செய்தலையும் காணலாம்.

**இரந்தோருக்கு ஈயாது  ஈட்டியவன்பொருள் போல்**
**பரந்து வெளிப்படாதாகி**
**வருந்துக தில்ல யாய் ஓம்பிய நலனே (அகம் 276: 13 - 15)**

ஒரு பெண் தனது கணவனுக்காக தன் பொருள்களையோ செல்வங்களையோ இழக்கத் தயங்க மாட்டாள் ஆனால் தன் கணவனை எள்ளளவும் புறத்தொழுக்கத்திற்கு இடம் தர மறுமையிலும் விரும்பமாட்டாள். தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை மறுத்தாலும் தலைவி தலைவனை மன்னித்து ஏற்றுக் கொள்கிறாள்.

**முடிவுரை**

தலைவி - தலைவனின் புறத்தொழுக்கத்தினை அப்படியே ஏற்றுக் கொண்டவளாகப் படைக்கப்படவில்லை தலைவனின் தவற்றைச் சுட்டிக் காட்டுவதாக, தலைவனுக்கு தானே உரிமை உடையவளாக, ஒழுக்கத்திலும் பண்பிலும் சிறந்தவளாக படைக்கப்பட்டு இருக்கிறாள் தலைவி. தன்னை மறந்த தலைவனைத் தான் மறக்காதவளாகக் காணப்படுகிறாள். அதேசமயம்

தலைவனை மன்னித்து ஏற்று இல்லறம் நடத்தும் நல்லறத்திலகமாகத் திகழ்கிறாள். தலைவனின் பல கொடுமைகளையும் தவற்றினையும் சகித்து பொறுமையோடு இருந்து தலைவனை மீட்டுக் கொண்டுவர தனக்கென ஒரு வரையறையை வகுத்துக் கொள்கிறாள் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படினும் விருந்தினர் வருகின்றபோது அவற்றையெல்லாம் வெளிக்காட்டாமல் தலைவனோடு சேர்ந்து அன்போடு உபசரித்து இல்லறக் கடமையாற்றுகின்றாள். தலைவனின் கொடுமையினைத் தன் தாயிடமோ தந்தையிடமோ அவள் கூறவில்லை. வாயில்களிடம் மட்டும் தன் மனக் குமுறல்களை எடுத்துரைப்பதாகத் தலைவி படைக்கப்பட்டிருக்கிறாள் ஒரு நல்ல மனைவி பன்மடங்கு நல்லொழுக்கங்களின் புதையல் வீடு. என்பது போல தலைவியிடம் ஒரு தாயின் அன்பு, பூமியின் பொறுமை, ஒரு அமைச்சரின் ஞானம், கற்பு, கருணை, தியாகம், பணிவு இவை அனைத்தும் அவளுக்குள் வெளிப்படுகின்றன. ஒரு முழுமையின் அடையாளமாக எட்டுத்தொகை அக நூல்களில் மருத நிலத் தலைவி விளங்குகிறாள்.

**குறிப்புகள்**

[1] அனந்தராமையர். இ. வை. (ப.ஆ). *கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்.* தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர், 1984

[2] இளம்பூரணர். (உ.ஆ) *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 2004.

[3] இராமகிருஷ்ணன். ஆ. *அகத்திணை மாந்தர் ஒரு ஆய்வு.* சர்வோதயா இலக்கியப் பண்ணை, மதுரை, 1982.

[4] கதிர் மகாதேவன். (உ.ஆ) *சங்க இலக்கிய பதிப்பு வரிசை நற்றிணை.* கோவிலூர் மடாலயம் கோவிலூர், முதற்பதிப்பு 2003.

[5] சுப்பிரமணியன். ச.வே. (உ.ஆ) *பத்துப்பாட்டு.* கோவிலூர் மடாலயம், கோவிலூர், 2003.

[6] சுப்பிரமணியன். பெ. பாலசுப்பிரமணியன் கு.வெ.,( உ.ஆ), தட்சிணாமூர்த்தி. அ. *சங்க இலக்கியம் பரிபாடல் மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, நான்காம் பதிப்பு 2011.

[7]செயபால். இரா. *சங்க இலக்கியம் அகநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2008.

[8] தமிழண்ணல். (உ.ஆ) *குறுந்தொகை.* கோவிலூர்மடாலயம், கோவிலூர், முதற்பதிப்பு 2002.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.